# காலராவிற்குக் காரணம் யார்?

## – பட்டிமன்றம் நடத்தும் அரசு அலுவலர்கள்!

அ. சாதிக்பாட்சா





**சி**க்குன் குனியா, டெங்கு, லெப்டோ பைரோசிஸ் என ஆண்டு தவறாமல் திருச்சியில் ஆஜராகும் தொற்று நோய்களின் வரிசையில் இம்முறை காலரா இடம் பிடித்திருக்கிறது. ஐந்துக்கும் மேற்பட்டோர் உயிரைக் குடித்துள்ள இந்நோய் மேலும் நூற்றுக்கும் மேற்பட்டோரைத் தாக்கி வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது. வழக்கம் போல், 'நோய்க்கான காரணம் என்ன? யாரின் அலட்சியத்தால் இந்தத் தொற்றுநோய் படையெடுப்பு நிகழ்ந்தது?' என்று அரசுத் துறை அலுவலர்கள் பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

திருச்சி மாவட்டம், முசிறி அருகேயுள்ள சிட்டிலரை, பணங்காடு, தும்பலம், கரலா வழி, மாங்கரைப் பேட்டை மற்றும் ஸ்ரீரங்கம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தாயனூர், சோமரசம்பேட்டை ஆகிய கிராமங்களில் ஒரு வாரமாக பலர் வயிற்றுப்போக்குக் காரணமாக அவதிப்பட்டு வந்தனர். ஒரு சில நாட்களில் வயிற்றுப் போக்கால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை நூற்றுக்கும் அதிகமானது. அதோடு சிலர் மரணத்தைத் தழுவிவிட நிலைமை விபரீதமானது.

கடந்த வியாழக்கிழமை தும்பலத்தைச் சேர்ந்த விஜயலட்சுமி (வயது 56), பாப்பாப்பட்டியைச் சேர்ந்த ஆறு மாதக் குழந்தை கங்கா ஆகியோர் இறந்து போயினர். அதற்கடுத்த தினங்களில் பணங்காடு கிராமத்தைச் சேர்ந்த பெரியசாமி, பாப்பாப்பட்டியைச் சேர்ந்த பாப்பாயி (வயது 50) ஆகியோரும் மரணத்தைத் தழுவி விட்டனர். இதனால் பொதுமக்கள் பெரிதும் அச்சமடைந்தனர்.

பிறகு அரசு இயந்திரம் தன் கடமையை நிறைவேற்றக் களத்தில் இறங்கியது.

நாம் தும்பலம் கிராமத்தைச் சேர்ந்த செந்தில்குமாரிடம் பேசினோம். "எங்க ஊருக்குத் தண்ணீர் சப்ளையாகும் மேல் நிலை குடிநீர்த் தொட்டியை சுத்தம் செய்து வருஷக்கணக்கு ஆகுதுங்க. அசுத்தமான தண்ணீர்தான் குடிப்பதற்கு எங்களுக்கு சப்ளையாகுது. அந்தத் தண்ணீர்தான் இப்ப சில பேரை சாகடிச்சிருச்சு. பல பேரை படுத்த படுக்கையா ஆக்கிடுச்சு" என்றார்.



தட்சிணாமூர்த்தியின் விசிட்

பிறகு அவரே தொடர்ந்து, "மருத்துவத் துறையினர் முதலில் விஜயலட்சுமி என்கிற பெண்மணி இறந்தபோதே பொதுமக்களை விழிப்படையச் செய்திருந்தால் அதற்கடுத்த உயிரிழப்புகளைத் தடுத்திருக்க முடியும். ஆனால் அவர் நெஞ்